**கொடகவெல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 22 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொடகவெல பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) காசுப்பாய்ச்சல் கூற்று
(ii) முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நூலகம் மற்றும் சுகாதார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கிடைத்த கடன் மீதி ரூபா 9,846,268 ஆகவும் பிரதான பேரேட்டில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் கடன் கணக்கில் காண்பிக்கப்பட்ட மீதி ரூபா 6,435,803 ஆகவும் இருந்தமையால் ஐந்தொகையில் கடன் மூலதனம் ரூபா 3,410,465 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது பிழையாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் மானியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடனுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 1,245,817 தொகையான வட்டிப் பணத்தில் உள்ளடக்கப்பட்ட முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 367,119 தொகையான வட்டி வழுக்களுடன் 2013 ஆம் ஆண்டின் செலவினத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மேலும் செலுத்த வேண்டிய ரூபா 60,638 தொகையான வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பலவின்ன கொங்கிரீட் தளத்தின் கடனைத் தீடுப்பதற்காக சபைக்குக் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தில் ரூபா 205,653 தொகை உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் நேரடியாக கழிக்கப்பட்டு அந் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு சபையின் முத்திரைக் கட்டண வருமானமாகக் கணக்கு வைக்க வேண்டிய ரூபா 205,653 தொகை மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது வணிகக் கணக்கிற்குரிய ரூபா 2,412,509 தொகையான வருமானமும் ரூபா 2,422,205 தொகையான செலவினமும் அந்தக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

சேவையைக் கைவிட்டுச் சென்றதன் காரணமாகவும் சேவை நிலைய இடமாற்றம் பெற்றுச் சென்றதனாலும் 05 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து ரூபா 67,900 தொகையான ஊழியர் கடன் மீதி சபை நிதியத்திற்குக் கடைக்க வேண்டியிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட இலங்கைக் குடியரசின் 2005 யூன் 08 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் விதி | உரிய விதிக்கு முரணாக மூன்று உறுப்பினர்களுக்காக ரூபா 15,000 உறுப்பினர் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | நிதிப்பிரமாண இலக்கம் 371(2)(இ) | 05 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 378,000 பெறுமதியான முற்பணத்தை அதன் பிரகாரம் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.5 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

எவ்வித முன் அங்கீகாரமும் இன்றி 13 உறுப்பினர்களுக்காக உறுப்பினர் படியிலிருந்து மீள அறவிடும் அடிப்படையில் ரூபா 260,000 முற்பணம் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய செயற்பாட்டு வருமானம் ரூபா 2,073,127 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய செயற்பாட்டு வருமானம் ரூபா 6,725,944 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிச் செயற்பாடுகளின் மிகை 69 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினங்களின் அதிகரிப்பும் ஏனைய செயற்பாட்டு வருமானங்களின் குறைவும் இதற்கு முக்கியமாகத் தாக்கமளித்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 2,852 | 3,604 | (752) |
| வாடகை | 7,163 | 6,430 | 733 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 570 | 539 | 31 |
| ஏனைய வருமானம் | 5,900 | 17,272 | (11,372) |

#### 2.3.2 ஆதனவரி

மீளாய்வாண்டின் இறுதியில் றக்வான உப அலுவலகத்தில் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 179,478 ஆக இருந்தது.

#### 2.3.3 வாடகை

றக்வான பொதுச் சந்தைத் தொகுதியில் 03 கடைகளின் கடை வாடகை ரூபா 131,955 தொகையான வருமானம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்டதுடன் 24, 25, 29, 30, 31 ஆம் இலக்க கடைகள் 2013 ஆம் ஆண்டின் போதும் கேள்வி கோரப்பட்டு வழங்கப்படாது எவ்வித வருமானமொன்றையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காது மூடி வைக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 ஏக்கர் வரி

கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் வரை நிலுவை ஏக்கர் வரியாக 211 நபர்களிடமிருந்து ரூபா 62,644 தொகை அறவிடவேண்டியிருந்ததுடன் காணி மெய்மையாய்வின் மூலம் கட்டணத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 காணி வரி

டெலிகொம் நிலையத்திற்குப் பின்பக்கமாகவுள்ள சபைக்குரிய காணிக்காக 2013 ஆம் ஆண்டில் எவ்வித வருமானமும் கிடைத்திருக்கவில்லை. வருட ஆரம்பத்தில் நிலுவை மீதி ரூபா 10,000 ஆகும். 2010 ஆகஸ்ட் 03 ஆந் திகதி முதல் வாடகையாளரினால் உரித்து தொடர்பாகவும், இந்தக் காணியின் சபைக்குச் சொந்தமான உரித்து தொடர்பாகவும் பிரச்சினைக்குரிய நிலைமை உருவாகியிருந்தது.

### 2.3.6 அறிவித்தல் பதாதைக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சபை அதிகாரப் பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டிற்குரிய அனுமதிப்பத்திரம் பெற்று காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் பதாதைக்குரிய 11 நிறுவனங்களிலிருந்து ரூபா 268,317 தொகை அறவிடவேண்டி இருந்ததுடன் மேற்கூறப்பட்ட நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக போதியளவான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் உரிய தரப்பினர் சபைக்கு வருகை தருகின்ற போது கொடுப்பனவுகளை அவர்களிடமிருந்து அக்கட்டணங்களை அறவிடுவதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றோ அல்லது அனுமதியற்ற அறிவித்தல் பதாதைகளை அகற்றுவதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றோ சபையிடம் காணப்படவில்லை.

பிரதேச சபையின் வருமானம் கட்டுப்பாட்டு உத்தியோகத்தருடன் 2014 மார்ச் 10 ஆந் திகதி கொடகவெல தொடக்கம் மாதம்மை சந்தி வரை இரத்தினபுரி வீதியின் இருபக்கமும் அமைந்துள்ள விற்பனைச் சாலைகளில் காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் பதாதைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 2013 ஆம் ஆண்டுக்கான 13 விற்பனைச் சாலைகள் சபையின் முறையான அங்கீகாரமின்றி அறிவித்தல் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது. இருந்த போதிலும் அதன் பின்னர் 4 விந்பனைச் சாலைகள் உரிய கட்டணத்தினை செலுத்தி இருந்த போதிலும் 9 நிறுவனங்கள் அறிவித்தல் பதாதைகளை சபையின் அங்கீகாரமின்றி தொடர்ந்தும் காட்சிப்படுத்தியிருந்தன.

### 2.3.7 நீர்க் கட்டணம்

ரக்வான நீர் செயற்திட்டத்தில் 317 நீர்ப் பாவனையாளர்களில் 58 பாவனையாளர்களுக்காக மாத்திரம் நீர்மானி பொருத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய பாவனையாளர்களுக்கான போதியளவான நீர் வழங்கப்படாமையால் ஒரு பாவனையாளரிடமிருந்து மாதமொன்றிற்கு ரூபா 100 வீதம் சிறிய வருமானமொன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.8 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

(அ) மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பெல்மதுல்லை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் மூலம் 2013 ஒக்தோபர் மாதம் வரை கிடைத்த ரூபா 1,024,667 தொகை மற்றும் எம்பிலிபிட்டி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் மூலம் 2013 பெப்ரவரி வரை கிடைத்த

ரூபா 502,039 தொகை மாத்திரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) 2013 மார்ச் மாதத்தின் பின்னர் காணிப் பதிவாளர் நாயகத்தின் மூலம் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டு பதிவேடு தயாரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு உரிய வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.9 கைத்தொழில் வரி

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர வரி அறவிடவேண்டிய தொழில் முயற்சிகளை இனங்காணும் வகையில் வருடாந்த மெய்மையாய்வொன்று கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 05 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தொழில் முயற்சிகள் வகைகளின் படி சேகரிக்கப்படுகின்ற வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு அந்த வரிகளுக்குரிய வருமானப் பதிவேடு பேணப்பட்டிருந்தது.

### 2.3.10 கடை வாடகை

றக்வான பொதுச் சந்தைத் தொகுதியில் 29 ஆம் இலக்க கடையில் 2013 திசெம்பர் 31 இல் வாடகையாளரிடமிருந்து ரூபா 12,950 தொகையான நிலுவை கடை வாடகை அறவிடவேண்டியிருந்ததுடன் வாடகையாளருடன் சட்டரீதியான உடன்படிக்கையும் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

### 2.3.11 ஏனைய வருமானம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் கணிசமான அளவில் ஒழுங்குமுறையற்ற முச்சக்கர வண்டி தரிப்பிடங்கள் காணப்பட்ட போதும், அதற்காக குறிப்பான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வசதிகளை வழங்கியதன் பின்னர் உப விதிகளை விதித்து வருடாந்தம் அல்லது மாதாந்தம் சபைக்கு வருமானமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

சபைக்குச் சொந்தமான பெகோ இயந்திரத்தின் ஓட்டக் குறிப்புக்களின் படி மீளாய்வாண்டில் சபையின் வேலைக்காக 1102 இயந்திர மணித்தியாலங்களும் தனியார் பிரிவிற்கு வாடகை அடிப்படையில் 199 இயந்திர மணித்தியாலங்களுமாக 1301 இயந்திர மணித்தியாலங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இதற்கான ஓட்ட அட்டவணை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் மேற்பார்வைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை. 283 சந்தர்ப்பங்களின் போது தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்டையில் சபை வேலைகளுக்காக ரூபா 2,425,590 பெறுமதியான வேலை நிறைவேற்றப்பட்டிருந்த போதிம் அதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீடும் சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே வேலைப் பூர்த்தி அறிக்கை அல்லது ஏனைய உரிய கோவைகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஒப்பந்த நிருவாகம்

மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 236,865 தொகையான கொடகவெல வாராந்த சந்தை வளவில் கட்டிட வரைபடங்களுக்குரிய செயற்பாடுகளின் வேலை விடய இலக்கம் 06 இன் கீழ் சுவரை துப்பரவாக்கி நிறப்பூச்சுக்களை இரு தடவைகள் பூசுவதற்காக ஒரு சதுர அடிக்கு ரூபா 2,699.55 வீதம் 72.75 சதுர அடிக்காக ரூபா 196,392 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2014 மார்ச் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சுவர் சரியான முறையில் சுத்தம் செய்யப்படாதிருந்ததுடன் ஆயுர்வேதக் கட்டிடம் தவிர ஏனைய கட்டிடங்களில் ஒரு தடைவ மாத்திரமே நிப்பூச்சு பூசப்பட்டிருந்தது.

(ii) அதன் படி 48.677 சதுர அடிக்கு ஒரு தடவை மாத்திரம் நிறம் பூசப்பட்டிருந்தமையால் அதற்குரியதாகச் செலுத்தப்பட்ட ரூபா 65,703 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) இந்த வேலைக்குரிய மதிப்பீட்டு விடய இலக்கம் 06 இன் கீழ் 55 சதுர அடிக்காக மாத்திரம் சுவர் ஒழுங்காக சுத்தஞ் செய்யப்பட்டு இரண்டு முறை நிறப்பூச்சுக்கள் பூசப்பட்டமைக்காக ரூபா 148,475 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த மதிப்பீட்டை விஞ்சி 72.75 சதுர அடி நிறைவேற்றப்பட்ட வேலைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.3 சுற்றாடல் முகாமைத்துவம்

கொடகவெல நகர அழகிற்கு பாதிப்பினை ஏற்படுத்தும் மற்றும் நகரத்திற்கு ஊடாக வழிந்தோடுகின்ற தொம்பகொல வாய்க்கால் பாதுகாப்பு பிரதேசத்திற்கும் சேதமேற்படுத்தி வாய்க்கால் வீதியின் மத்தியில் நிர்மாணித்தல் கணிசமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2010 யூலை 14 ஆந் திகதி 1662/17 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க பாதுகாப்பு அமைச்சரின் கட்டளையின் படி இந்த நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலமும் ஒதுக்கப்பட்ட பிரதேசமாகையால் அதில் எந்த தற்காலிக அல்லது நிரந்தர நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்ட முடியாதிருந்ததுடன் இந்த வளவில் மேற்கொள்ளப்படுகின்ற எந்த ஒரு நடவடிக்கைக்காகவும் இலங்கை நில மீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் தீர்மானித்த நிபந்தனைகளின் கீழ் அதன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் எழுத்து மூல முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் இந்த நிர்மாணங்களுக்காக அவ்வாறான எந்தவித அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற இந்த அனுமதியற்ற நிர்மாணங்களின் மூலம் நீர்த் தேக்கத்திற்கு பாதிப்பு ஏற்படுவது மட்டுமல்லாது நகரத்தின் அழகிற்கும் பாதிப்பு ஏற்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கிடையே மேற்கொள்ளப்படுகின்ற கடிதக் கொடுக்கல் வாங்கல் தவிர இந்த அனுமதியற்ற நிர்மாணங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் தாமதமாகியிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5(7) இன் பிகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 309 ஆம் இலக்க செலவினத் தலைப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 4,999,496 தொகையான மேலதிக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக 26 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 191,000 தொகையான நிதிஏற்பாட்டில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாது சேமிக்கப்பட்டிருந்ததுடன் செலவினத் தலைப்பு 69 இற்குரியதாக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் ரூபா 8,660,801 தொகை குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) சுற்றாடல்